நல்லூர் இன்ன நூலகம்
மாதகல் வடமேற்கு
யாழ்ப்பாணம்

Physics Class
Viyaparimoolai
Pointpedro
G.C.E. (A/L) 1988
ஆரம்பம்: 20-7-86
காலை 6 மணி
VARNAM
B.Sc. (Hons)

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

Physics Class
Viyaparimoolai
Pointpedro
G.C.E. (A/L) 1988
ஆரம்பம் 20-7-86
காலை 6 மணி
VARNAM
B.Sc. (Hons)

கூடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஷு ஆனி மீ 26 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 2 (10.07.1986) UTHAYAN- A LIVELY TAMIL DIALY கதிர்:- 200

லொறிகள் மீது துப்பாக்கிச் சூடு

16 சிங்களவர் உயிரிழப்பு

— திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, ஜூலை 10

திருமலையில் இருந்து கொழும்புக்கு மீன் ஏற்றிச் சென்ற மூன்று லொறிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் 16 சிங்களவர்கள் உயிரிழந்தனர்.

சம்பந்தப்பட்ட மூன்று லொறிகளும் எரிக்கப்பட்டன.

திருகோணமலை - கண்டி வீதியில் திருமலையில் இருந்து ஆறாவது மைலில் இச் சம்பவம் நேற்றுமுன் தினம் (செவ்வாய்க்கிழமை) இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது.

திருகோணமலை நகரில் ஐக்போடப்பட்ட மீன் வலைகளை ஏற்றிக் கொண்ட மூன்று லொறிகள், இரவு 8 மணி அளவில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டன.

இந்த லொறிகளில் சாரதிகள், கிளீனர்கள் உட்பட 16 பேர் பயணஞ் செய்தனர்.

கண்டி வீதியில் திருமலையில் இருந்து ஆறுமைல் அருகில் லொறிகளை ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ளவர்கள் மூக்கைப் பொத்துகின்றனர்!

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் இருந்து வீசும் துர்நாற்றத்தால் அயலில் குடியிருப்பவர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு அவலப்பட வேண்டி உள்ளது

இப்பிரேத அறைக்கு அருகில் சமையல் அறை, ஆய்வுகூடம், இரத்த வங்கி, சில வார்டுகள் ஆகியன அமைந்து உள்ளன.

இவற்றில் கடமை புரியும் டாக்டர்கள், ஊழியர்கள், சிகிச்சை பெறும் நோயாளர்கள் நாற்றத்தைச் சகித்துக்கொண்டு இருக்க வேண்டியுள்ளதாம்.

பிரேத அறைக்கு குளிர் சாதனப்பெட்டி ஒன்றை வரவழைக்க எடுத்த முயற்சி வீணாகிப் போய்விட்டதாம்

குளிர் சாதனப் பெட்டியை வரவழைக்க கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்ட காசோலை மீண்டும் வைத்திய அத்தியட்சகருக்கே அனுப்பிவைக்கப்பட்டது

தற்போதைய நிலையில் பிரேதங்களை வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் கவலையுடன் சொன்னார்.

பிரேதங்களைத் தாமதம் இன்றி உறவினர்கள் எடுத்துச் செல்ல வேண்டும் குளிர்சாதன இயந்திரம் பொருத்தப்படும்வரை ஏற்படும் சிரமங்களை சகித்துக்கொள்ள வேண்டும்—

இப்படி அத்தியட்சகர் டாக்டர் எஸ் நச்சினார்க்கினியன் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (இ-எ-6)

கூட்டணியுடன் பேச்சு:

இந்தியாவுக்கு அனுப்பிய யோசனை அடிப்படையில்தான்!

கொழும்பு, ஜூலை 10

இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளின் அடிப்படையிலேயே கூட்டணியுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும்.

இப்படி ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா, இந்தியத் தூதர் திரு டிக்ஸிற் மூலம் இந்தியாவிற்கு அறிவித்து விட்டார்.

இந்திய அரசுக்கு அனுப்பப்பட்ட யோசனைகளுக்கும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்திய அரசுக்குச் சுட்டிக் காட்டியது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்து, இந்தியத் தூதர், தனாதிபதியைச் சந்தித்தார். அப்போதே ஜனாதிபதி இந்த உறுதியை வழங்கினார்.

இந்திய அரசுக்கு அனுப்பிய யோசனைகளில் —

கவர்னர் நியமிக்கப்படுவது குறித்து பரிசீலனை செய்யப்படும் — என்றுதான் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் —

கவர்னர் நிறைவேற்று அதிகாரங்களுடன் நியமிக்கப்படுவார் — என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

இதன்படி புதிய யோசனைகள் அதிகாரப் பரவலாக்கத்தை மையமாகக் கொண்டிருக்கவில்லை —

ஜனாதிபதி தனது பிரதிநிதி ஒருவரிடம் அதிகாரங்களை ஒப்படைப்பதாகத் தான் உள்ளது — என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சுட்டிக் காட்டியது

இதைத் தொடர்ந்தே

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 தமிழர் சுட்டுக் கொலை

சடலங்களை வீதியில் இழுத்துச் சென்று தீவைப்பு

திருகோணமலை, ஜூலை 10

திருகோணமலை நகரில் பிரதான வீதியில் வசித்து வந்த ஒரு தமிழர் குடும்பத்தில் ஐந்துபேர் நேற்று புதன் அதிகாலை 4 மணியளவில் ஊர்காவல்படையைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுவோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தந்தை, தாய், இரண்டு மகன்கள், ஒரு மகள் ஆகியோர் இப்படிக் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் தாய், இரண்டு புதல்விகளின் சடலங்கள் அவர்களின் வீட்டில் இருந்து வீதிவழியாக இழுத்து வரப்பட்டு திருமலைப் பிரைசைகள் குழுவின் தலைவர் திரு க. சிவபாலனின் வீட்டின் முன்னால் போடப்பட்டு அரைவாசி எரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன.

தந்தை, மகன் ஆகியோரின் சடலங்கள் வீதி வழியாக பஸ் நிலையம் வரை இழுத்துச் செல்லப்பட்டு மணிக்கூண்டுக் கோபுரத்தின் முன்னால் முகால்வாசி எரிந்தநிலையில் எரிக்கப்பட்டிருக்கக் காணப்பட்டன.

அக் குடும்பத்தைச் சேர்ந்த திலகா என்ற சிறுமி சுட்டுக் காயங்களுடன் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

புதன் அதிகாலை 4 மணிக்குப் பின்னர் பிரதான வீதியில் இருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஊரடங்கு

இன்று காலைவரை

திருகோணமலை, ஜூலை 10

திருகோணமலை நகரில் நேற்றுக் காலை திடீரென்று நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்பட்டது.

திருமலையில் இடம்பெற்ற இரண்டு சம்வங்களில் 21 பேர் உயிரிழந்தனர் அல்லவா? இதைத் தொடர்ந்தே இந்த ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

"ஸ்ரீராம ஜெயம்" ட்ரோலரில் வந்த இந்திய மீனவர்பத்துப்பேரில் படகினரின் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் உயிர்தப்பிய ஒருவொருவர் வேலுதேவன் கணபதி.

மற்றைய மீன்பிடி ட்ரோலரான "அஞ்சுலினில்" கரை ஒதுங்கிய ஐந்து இந்திய மீனவர்களான அந்தோனி, பௌரூடின், மு. ஆறுமுகம், பெரியநாடார், ஆறுமுகம் நாகமுத்து ஆகிய ஐவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் வேலுதேவன் கணபதியை அங்கு சென்று சந்தித்தனர். அப்போது எடுக்கப்பட்ட படத்தைக் காணலாம். (உ)

படுவான்கரை தேடுதலில் 17 தமிழர்கள் உயிரிழப்பு

—மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர்—

மட்டக்களப்பு ஜூலை10

மட்டக்களப்பு படுவான்கரைப்பகுதியில் கடந்த நாட்கள் மாலை முதல்செவ்வாய் மாலைவரை யாழ் காப்புப்படையினர் நடத்திய தேடுதல் விமான, ஹெலிகொப்டர் தாக்குதல்கள், குண்டு வீச்சுகள் ஆகியவற்றினால் குறைந்தது 17 தமிழர்கள் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பு பிரசைகள் குழுவுக்குக் கிடைத்த தகவல்களில் இருந்தே இது தெரிய வந்திருக்கிறது.

பிரசைகள் குழுவின் உப தலைவர் வண. பிதா. சந்திரா பெர்னாண்டோ, உப செயலாளர் திரு நடுவராஜாஆகியோர்சம்பவம் நடந்த இடங்களை நேற்றுப் பார்வையிட்டனர்.

அப்பகுதியில் விமானத் தாக்குதலினால் சுமார் 20 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

வயல் வாடி ஒன்று நெல் மூடைகளுடன் எரிந்து சாம்பராகக் கிடந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

லொறி உரிமையாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடமாகாண லொறி போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தின் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மணிக் கூட்டு வீதியில் உள்ள ஹோட்டல் ஞானம்லில் நடைபெறும்.

தற்போது போக்குவரத்துச் சேவையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்படும். (இ-எ)

போராளிகளுக்கு இன்று அஞ்சலிக் கூட்டங்கள்; துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

படகு விபத்து ஒன்றில் பலியான மக்கள் விடுதலைப் படைப் போராளிகள் எழுவருக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டங்கள் இன்று வியாழன் காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி சந்தை மைதானத்திலும் இன்று மாலை 4 மணிக்கு யாழ் சென்ஜோஸ் ஆலய முன்றலிலும் இரவு 7 மணிக்குக் கோப்பாய் பிள்ளையார் கோயிலடியிலும் நடைபெறும்.

இதவிடையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்குடாநாட்டில் பல பாகங்களில் புதன்கிழமையே அஞ்சலி செலுத்துமுகமாக தோரணங்கள், கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

முதாம ஒன்றைத் தாக்குவதற்குச் சென்று கொண்டிருந்த சமயத்தில் மக்கள் விடுதலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

10—07—1986

வியாழக்கிழமை

சுபநேரம்:-
7.28 முதல் 8.58 வரை
ராகுகாலம்:-
1.28 முதல் 3.58 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

புதிய யோசனை வெறும் போலி டேவிட் செல்போர்ன் கருத்து

நியூயார்க், ஜூலை 9

இலங்கையின் புதிய யோசனைகள் வெறும் போலியானவை.

— இப்படிச் சொன்னார் இலங்கைத் தமிழர் அனுதாபியும் பிரபல பத்திரிகையாளருமான திரு. டேவிட் செல்போர்ன்.

நியூயார்க்கில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் சொன்னதாவது:-

ஜெயவர்த்தனாவின் நடவடிக்கைகளுக்கு இந்தியா ராஜதந்திரக் வசம் வழங்குகின்றது.

இந்தியா தனது நகுநிக்கு ஏற்ற விதத்தில் செயற்படவில்லை.

இந்திய பாக்கு நீரிணைப் பகுதியில் விழிப்பாகச் செயல்படலாம். தமிழருக்கு எதிராக இடம் பெறும் குரூரக் கொலைகளை அவதானிக்க இந்திய விமானப் படைக்கு உத்தரவிடலாம். ஆனால் செய்யவில்லை.

இலங்கைக்கு எதிராக சர்வதேச அபிப்பிராயத்தைத் திரட்டவும் இந்தியா தவறிவிட்டது.

இப்படித் தெரிவித்தார் திரு. டேவிட் செல்போர்ன். (உ-எ-2)

20 தமிழர் கைது

திருகோணமலை ஜூலை10

பூஸாவில் இருந்து தேறாது முகாமிடம் விடுவிக்கப்பட்ட சில இளைஞர்கள் உட்பட சுமார் 20 தமிழ் இளைஞர்கள் நேற்றுக் காலை திருமலையில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டனர். (இ - எ - 150)

முஸ்லிம் மாணவன் கைதானதை ஆட்சேபித்து விரிவுரை பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ் பல்கலைக்கழக மாணவன் ஆதம்பாவா மன்சூர் கடந்த 07 ஆம் திகதி ஆனைவிறவில் வைத்து கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் ஆதரவுடன் இந்தப் பகிஷ்கரிப்பு நடத்தப்பட்டது.

இந்த விடயத்துடன் முஸ்லிம் மத்திரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

மண்டைதீவில் நினைவுத் தூபி

மண்டைதீவு ஜூலை 10

மண்டைதீவு தெற்கு கடற்கரையில் 31 மீனவர்கள் கொலையுண்ட இடத்தில் ஒரு நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவுத் தூபியை செவ்வாய்க்கிழமை காலை இப் பகுதி பங்குத் தந்தை வண. பிதா. யே கமிலஸ் நிமலன் அடிகள் திறந்து வைத்தார்.

மண்டைதீவு புனித பேதுருவானவர் தேவாலயத்தில் விசேட பூசை வழிபாடு நடைபெற்றதை அடுத்து இப்பகுதி மக்கள் பெரும் தொகையாக சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு ஊர்வலமாகச் சென்றார்கள். (இ-88)

கொழும்பு செல்ல பெர்மிட் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 10

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்பட இருந்த தனியார் பஸ்கள், லொறிகளுக்கு யாழ் கோட்டை நிர்வாக அதிகாரிகள் பெர்மிட் வழங்க மறுத்து விட்டனர் —

தனியார் பஸ்கள், பிரயாணிகளுடனும், லொறிகள் பொருள்களுடனும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நீண்ட இடைவெளிக்குப் பின் அமைச்சர் இராசு மட்டுநகர் விஜயம்!

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை தமது சொந்த ஊரான மட்டக்களப்புக்கு நேற்று விசேட விமானத்தில் வந்து சேர்ந்தார்.

தமது அமைச்சினால் ஒதுக்கப்பட்ட 45 லட்சம் ரூபா நிதியில் கட்டி முடிக்கப்பட்ட விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை நேற்றுத் திறந்து வைப்பதற்காகவே அவர் மட்டுநகர் வந்தார்.

வந்த கையோடு திறப்பு விழாவை முடித்துக் கொண்டு மதியம் உடனடியாக அவர் விமானத்தில் கொழும்பு திரும்பினார்.

திறப்பு விழா உரையில் அவர் அரசியல் எதுவும் பேசவில்லை.

நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவுவதற்கு வேண்டி தமிழ் மக்கள் ஆலயங்களில் திருவிளக்கு பூசை, தேவாரபாராயணம் ஆகியவற்றில் ஈடுபட வேண்டும் என அவர் தமது உரையில் கேட்டுக் கொண்டார். (உ-31)



முச்சுருதிமுரளி

ஓர், ஓர், பதவியின் தலைக்கு மேலாலே வந்தால் சொந்த ஊருக்கும் விமானம் இல்லை ரெயிலுக்கட்டிலையும் முச்சுப்பேச்சில்லாமல் வந்து போவினம் தான்!

இளைய தலைமுறையினருக்கு ஆர்வமூட்டும் இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டில் பல தொழிற்சாலைகள் ஸ்தம்பிதமடையும் நிலை

— கலுவலகச் செய்தியாளர் பி. இரட்ணதுரை —

யாழ்ப்பாணம், ஜூலை10

யாழ் குடாநாட்டில் உள்ள பல பெரிய, நடுத்தர சிறிய தொழிற்சாலைகளில் வேலைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடையும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

தொழிற்சாலைகள் பலவற்றிற்கு கட்டாய தேவையான ஒட்சிசன், அசற்றலின் சிலிண்டர்கள் குடாநாட்டிற்கு கொண்டு வரப்பட முடியாமல் இருப்பதே இந்த நிலைமை ஏற்படக் காரணம்.

போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர் விதித்திருக்கும் கெடுபிடி —

குண்டுப் புரளிகளினால் 'காவி' நிரப்பும் தொழிற்சாலைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடு ஆகியவை காஸ்சிலின்டர்களைத் தருவிப்பதில் சிக்கலை ஏற்படுத்தியிருக்கின்றன.

இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கும்படி பலதொழிற்சாலை உரிமையாளர்களும் வெல்டர்களும் அரச அதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை இராணுவத்தினருக்கும், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கும் தேவையான சிலிண்டர்கள் கப்பலில் வருகின்றன என்று தெரிகிறது. (உ - 5)

மீறியோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை.10

ஒலி, ஒளி ஒன்றியத்தின் ஒழுங்கு விதிமுறைகளை கடைப்பிடிக்காது நடத்துகொண்ட உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டதுடன் மோசமாக தொலைக்காட்சி நடத்தியவர்களின் உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை தமிழ் மாணவர் பேரவை சீல் வைத்து பறிமுதல் செய்தனர்.

கடந்த ஏழாம் திகதி இரவு உடுவில் ஊர் தொலைக்காட்சி நிலையங்கள் மீது இவர்கள் நடத்திய திடீர் சோதனையின் போதே இந்த ஒளிபரப்புகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இவர்களுக்கான அடுத்த நடவடிக்கை பற்றி 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படும் என தமிழ் மாணவர் பேரவை தெரிவித்துள்ளது.(உ-10)

ஈழவர் முன்னணியின் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கெதிராக இலங்கை அரசினால் திட்டமிட்டு நடத்தப்படும் இனப் படுகொலைகளையும் அராஜக நடவடிக்கைகளையும் கண்டித்து காரைநகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

ஈழவர் முன்னணியால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நாளை மறுதினம் வியாழனில் காலை 8 மணிக்கு ஆரம்பித்து காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சென்று முடிவடையும்.

ஊர்வல முடிவில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது. (உ-5)

பிரயாண ஒழுங்குகள்

✷ கனடா
✷ ஜேர்மன்
✷ பிரான்ஸ்
✷ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொன்ட் (BOND), ரிக்கட்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

டென்மார்க்
ஆகிய இடங்களுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP
சின்னத்தம்பி அவெனியூ
(மகாவீர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.



யாழ். இந்துக்கல்லூரியில் கல்விக் கண்காட்சி கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற்றது.வலாளியல் கழகத் தலைவரும், யாழ். இந்து பழைய மாணவர் சங்க உபதலைவருமான திரு. டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் சனிக்கிழமையன்று கண்காட்சியைத் திறந்து வைப்பதையும் கல்லூரியின் உப அதிபர்களான திரு. பொன். மகேந்திரன், காப்டன் என். சோமசுந்தரம் ஆகியோர் இருபக்கத்திலும் நிற்பதையும் முதல் படத்தில் காணலாம்

முதலாம் நாள் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. வி. தங்கராஜா மாணவர்கள் மத்தியில் உரையாற்றுவதையும் அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் அருகில் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். (உ)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

கிழக்கில் தமிழர்கள் வாழும் பகுதிகள் கொண்ட தனி மாகாணம்

இ.தொ.கா. கோரிக்கையை ஜே.ஆர் ஆராய்வார்

சென்னை, ஜூலை 9

கிழக்கு மாகாணத்தில் தமிழர் வாழும் பகுதியை வேறுபடுத்தி தனியான ஒரு தமிழ் மாகாணமாக அதனை உருவாக்கலாம் என்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சிபார்சு தொடர்பாக விளக்கமான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா கேட்டுள்ளார்.

சென்னையில் திரு எஸ். தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சிபார்சு குறித்து ஆராய ஜனாதிபதி ஒப்புக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் தமிழர்கள் அதிகமாக உள்ள பகுதிகளைச் சுலபமாகத் தெரிந்தெடுத்து அவற்றைத் தமிழ் மாகாணம் ஒன்றின் கீழ் கொண்டுவர முடியும் என்றும் —

அதனை நிர்வகிக்கும் பொறுப்பு தமிழரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் தொண்டமான் தெரிவித்திருந்தார்.

இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றைக் காண அடிப்படையாக அமையும் வகையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் இணக்கமான யோசனைகள் குறித்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கருத்துத்தெரிவித்தது.

இக்கருத்துக்களை ஜனாதிபதி பரிவுடன் செவிமடுத்ததாகவும் திரு. தொண்டமான் தெரிவித்தார்.

புதிய யோசனை குறித்து அவர் திருப்தி தெரிவித்தார்.

தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து அரசியல் தீர்வு ஒன்று ஏற்பட உதவும்வண்ணம் இலங்கை அரசும் தமிழ்ப் போராளிகளும் ஆக்கபூர்வமாக முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (உ-ஒ)

நேசையாவுக்கு பட்டமளிப்பு

சாவகச்சேரி, ஜூலை10

பேராசிரியர் திரு. கு. நேசையா "அறவழிக் காவலர்" என பட்டமளித்துக் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

அறவழிப்போராட்டக் குழுவினால் எடுக்கப்படும் இப்பட்டமளிப்பு விழா இம்மாதம் 18 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெறும்.

அறவழிப்போராட்டக் குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராசிரியருக்குப் பட்டம் அணிந்து கௌரவிப்பார். (இ-31)

பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 10

இளவாலை ரோ. க. தமிழ் ஆண்கள் வித்தியாலய பெற்றோர் தின விழா இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

கல்லூரி அதிபர் ஆ. சவிரிபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வட்டாரக் கல்வியதிகாரி பொ. சிவஞானசுந்தரம், அருட்திரு அன்ரன் இராஜநாயகம், திரு. அ. சந்தியாப்பிள்ளை, அருட்திருமைக்கல் பற்றிக், திரு. சி. சிவபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். (உ-5)

நினைவு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 10

மண்டைதீவுச் சப்வத்தில் உயிரிழந்த குருநகர் கடற்றொழிலாளரின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்ச்சிகள் குருநகர் கலை அரங்கில் இன்று நடைபெறும்.

நினைவுத்தூபி திரைநீக்கம் செய்தல், அஞ்சலிக் கூட்டம், இரங்கற் திருப்பலி ஆகியன இடம் பெறும். (உ-எ)

வாங்கவும் விற்கவும்

தேவை

எம்மிடம் அனேக மனமக்கள் உண்டு. விரைவில் இல்லறத்தில் புகுத்துவோம் ஸ்ரீ மாணவிநாயகர் மகிளை ஏஜன்சி, கொல்லங்கலட்டி தெல்லிப்பழை கிளை 52/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சைவப் பண்பாடு வளர்த்த நாவலர்

செப்டம்பரில் எழுச்சி விழா

"ஈழத்திலும் தமிழகத்திலும் சைவ தமிழ்ப் பண்பாட்டினை வளர்த்த பெருமை நாவலர் பெருமானுக்கேயுரியது

நாவலர் பெருமான் பரம்பரையில் ஈடிணையற்ற தமிழ் அறிஞராக விளங்கியவர் முதறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். அவர்களது ஞாபகமாக யாழ்ப்பாண நாவலர் மகாவித்தியாலயத்தில் நிறுவவிருக்கும் நாவலர் சைவ தமிழ்ப் பண்பாட்டு நிலையம் வருங்கால மாணவர்களின் கல்விக்கு கலங்கரை விளக்கமாக நிச்சயம் திகழும்".

நாவலர் மகாவித்தியாலயத்தில் நிறுவப்படவுள்ள சைவ தமிழ்ப் பண்பாட்டு நிலைய ஆலோசனைக் குழுவுக்குத் தலைமை வகித்துப் பேசிய வட மாநில கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

செப்டம்பர் மாதம் நடைபெறவிருக்கும் நாவலர் எழுச்சி விழா ஏற்பாடுகள் குறித்து கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

சமயச் சொற்பொழிவுகள், பண்ணிசை, புராண படனம், கலை அரங்குகள் அமைப்பது பற்றித் திருவாளர்கள் இ. திருநாவுக்கரசு, எவி. சிவஞானசுப்பிரமணியம், க. சி. குலரத்தினம், பி. நடராசன், அ. பஞ்சாட்சரம், திருமதி. மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர்கள் ஆலோசனை வழங்கினார்கள்.

பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் நிறைவுரை நிகழ்த்தினார்.

ஓய்வூதியப் பணம் பெறும் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம் ஜூலை 10

இதுவரை தபால் திணைக்களம் மூலமாக கோட்டை சென்று ஓய்வூதியம் பெற்று வந்தவர்கள் பலர் தங்கள் ஓய்வூதியப் பணம் பெறும் இடங்களை மாற்றியுள்ளனர்.

அரச அதிபரினதும் அதிகாரிகளினதும் வேண்டுகோள்களினாலேயே கிராமிய வங்கிகளுக்கு அவற்றை மாற்றம் செய்திருக்கின்றனர்.

கடந்த மாதத்திலிருந்து மட்டும் சுமார் ஆயிரம் பேர் வரையில் இடமாற்றத்திற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ளனர் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ 5)

தேடுதலில் அப்பாவிகள் அகப்படுவது உண்மை

உதவி இணைப்பதிகாரி ஊர்ஜிதம்

திருகோணமலை, ஜூலை10

தேடுதல் வேட்டையில் அப்பாவிகள் அகப்படத்தான் செய்கிறார்கள். இதற்காக நாமும் வருத்தப்படுகிறோம். 1971இல் சிங்களவருக்கும் இப்படித்தான் நடந்தது.

இப்படி திருகோணமலை உதவி இணைப்பதிகாரி கேர்ணல் முஸாபர், திருகோணமலை கடற்படைத் தளத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அப்பாவிமக்கள் தொல்லைகளுக்குள் மாட்டிக் கொள்ளாதிருக்க, தீவிரவாதிகளிடமிருந்து ஒதுங்கி வாழவேண்டும் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கும் போது அப்பாவி மக்களும் பாதிக்கப்படத்தான் செய்கிறார்கள்.

பூஸாவுக்குக் கொண்டு போகப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்படு விட்டார்கள். இன்னொரு பகுதியினர் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள்.

இப்படி உதவி இணைப்பதிகாரி தெரிவித்தார். (உ-எ-150)

பாதுகாப்பு சேவை

யாழ்ப்பாணம் ஜூலை 10

தெல்லிப்பளை பாதுகாப்புச் சேவையினர் 18 வருடகாலமாகமாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் வருடாந்த உற்சவ காலங்களில் சேவை செய்து வருகின்றனர்.

இம்முறையும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவக் காலங்களை முன்விட்டு 26 நாட்களும் இரவு பகல் நேர தொடர்ச்சியான பாதுகாப்புச் சேவையை [illegible] (உ-ஒ)

ரெலிகுளோப் ரெலிபோன் சேவை

கோட்டைக் குண்டடிக்கு விலகி
அப்பால் பாதுகாப்பாக நின்று
ரெலிபோன் பேச
விரும்புபவர்களுக்கு

ரெலிகுளோப், ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

வெளிநாடு செல்பவர்களுக்கு---

வெளிநாடு செல்பவர்கள் தமது உடைமைகளை நியாய விலையில் விற்க ஓர் அரிய வாய்ப்பு. வாகனங்கள், இயந்திரங்கள், மின்உபகரணங்கள், வீடுகள், காணிகள், மற்றும் எதுவாயினும் இலகுவாக விற்றுக்கொள்ளலாம். ஏமாற்றாத்தைத் தவிர்க்கலாம். மக்களின் நம்பிக்கையைப் பெற்ற எமது ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Mack Auctioneers & Brokers
No. 8, 1st Lane Point Pedro Road, Jaffna; Tele: 24791, 24836

கொழும்புக்கு உடனடித் தொலைபேசித் தொடர்புகள்
சர்வதேச ரெலிபோன் -ரெலெக்ஸ்

துரித கதியில் தொலைபேசித் தொடர்பைப் பெற்றுத் தருபவர்கள் என்ற பெருமையைப் பெற்ற ஸ்தாபனம்
M. C. T.

* எந்த நாட்டுக்கும் துரித தொடர்பு
* நியாயமான சரிவான கட்டணம்
* பாதுகாப்பு மிக்க இடம்
* இரவில் தங்க அறை வசதி
* பாதுகாப்பான வாகனத் தரிப்பிடம்

Mack Communication & Travels
No: 8, 1st Lane, Point Pedro Road
Jaffna Tele:- 24791, 24836.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

இல்லறம் நடத்துங்கள். ஆனால் ஒரு கையால் வாழ்க்கைக் கடமைகளைச் செய்து கொண்டு ஒரு கை பகவான் காலைப் பிடித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

— ராஜாஜி

உதயன்

உண்மை – விடுதலைக்காக – நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை
விக்கிரர நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,

தொலைபேசி 24805
22073
10-07-86 த. பெ. 23

மீண்டும் கேட்கிறது ஓலம்

வழமையான ஓலம் கேட்கத் தொடங்கி விட்டது.

இப்போதெல்லாம் மனித உயிர்கள் துச்சமெனக் கருதப்பட்டு அவற்றில் பல நாளாந்தம் ஒழிக்கப்படுகின்றன. அவ்வாறு ஒழிக்கப்பட்ட உயிர்களுக்கு உரியவர்களின் உறவினர்களைக் கும் சோக ஓலத்துக்கு எமது நாட்டில் இப்போது குறைவில்லை குறிப்பாக எமது தமிழ்ப் பகுதிகளில், இன்று இல்லையேல் நாளை — நாளை இல்லையேல் அடுத்த நாள் — அதுவும் இல்லையேல் ஏதோ ஒரு நாள் எல்லா வீடுகளிலும் அவலமாக அழிக்கப்பட்டவர்களின் இழப்பைத் தாங்க முடியாதவர்களின் துயரக் குரலைக் கேட்கிறோம் பலருக்கு இறுதிச் சடங்குகள் செய்யக்கூடச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

கடந்த ஒரு சில மாதங்களாகவுக் கைப்போல், கிழக்கைப்போல தெற்கிலும் மேற்கிலும் அவலக் குரல்கள் கேட்கின்றன

இந்தத் துயர ஓலங்களுக்கு மத்தியில் மற்றொரு ஓலம் தென்னிலங்கையில் ஒலிக்கத் தொடங்கி விட்டது. ஆம் தென்னிலங்கையில் உள்ள சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளினதும் சிங்களத் தீவிரவாதிகளினதும், மகா சங்கத்தினர் என்று பெரிதாக வர்ணிக்கப்படும் பௌத்த துறவிகளினதும் ஓலத்தைத் தான் நாம் இங்கு குறிப்பிடுகிறோம்.

இந்த ஓலங்கள் புதிய ரகங்கள் என்று சொல்வதற்கில்லை ஆட்சியில் உள்ள சிங்கள அரசு எதுவும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்று ஒரு சிறிய நடத்தை முன் வைத்தால் கூட, உடனே இந்த ஓலங்கள் கேட்கத் தொடங்கி விடும்.

1957 இல், 1965 இல் 1967 இல், 1977இல் என்று பல தடவைகள் கேட்ட ஓலங்களின் அதே வகைதான் ஆனால் நேரத்துக்கு நேரம் அவலக் குரல் எழுப்புவோரில் சிலர் மாறிக் கொள்வது உண்டு ஆனால் மகா சங்கத்தின் இத்துக்கு வேறு யாரும் மாறியது கிடையாது.

மாகாண சபை யோசனைகள் தமிழர்களின் அபிலாஷைகளைப் பத்துச் சத விதமாவது பூர்த்தி செய்யும் விதத்தில் இல்லை என்று மதிப்பிடப்படுகிறது. தமிழ் மக்கள் கடந்த 34 வருடங்களாக அனுபவித்த இன்னல்களையும், கஷ்டங்களையும் தீர்க்கும் விதத்தில் அது அமையவில்லை. தமமைத் தாமே ஆளும் அவர்களது பிறப்புரிமையைப் பேணுவதற்கான ஆகக் குறைந்த தீர்வு என்று கூறக்கூடிய சுயாட்சிக்குத் தானும் மாகாண சபை யோசனைகள் வழி செய்யவில்லை.

நிலைமை அவ்வாறிருக்க, தமிழர்களுக்கு அரசாங்கம் சொர்க்கத்தைத் தாரை வார்க்கப் போகிறது என்ற தொனியில் தென்னிலங்கையில் அழுகிறார்கள்; இல்லை இல்லை ஓலமிடுகிறார்கள்.

மாகாண சபை பிரிவினைக்கு வழி வகுக்கும் என்று சிறிமா கூப்பாடு போடுகிறார்.

மாகாண சபை யோசனை சிங்கள மக்களின் வாழ்க்கையில் நீண்டகாலத் தாக்கத்தை ஏற்படுத்தும். அதனை அவசரப்பட்டு நிறைவேற்ற வேண்டாம் என்கிறது மகா சங்கம்.

புதிய யோசனைகளை வாபஸ் பெறவேண்டும் என்று பௌத்த துறவிகளில் மற்றொரு சாரார் கேட்கிறார்கள். விதி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மாகாண சபை யோசனைகளின் மூலம் இலங்கைக் கடல் பிராந்தியத்தில் பெரும் பகுதி தமிழர்களுக்குப் போய்விடும் என்று நித்திரையில் கூழறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் அனுர பண்டாரநாயக்கா.

புதிய யோசனைகளை அரசியல் கட்சிகள் ஆராய்ந்து ஒரு சரியான வடிவம் கொடுக்கத் தொடங்கும் முன்னரே குழறல்கள் — ஒப்பாரிகள் கேட்கத் தொடங்கி விட்டன.

தமிழ் மக்களின் ஆகக் குறைந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இப்போதைய யோசனைகள் திருத்தப்படுவதாக ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம்

அவ்வேளை இந்த ஒப்பாரிக்காரர்கள் எத்தனை கட்டை 'சுருதி'யில் ஓலமிடுவார்கள் என்று கற்பனை செய்ய முடிகிறதா உங்களால்?

தீவை நிறைவேற்றத் தான் விடுமா இந்தக் கும்பல்கள்?

இப்போதைய ஜனாதிபதியும் முன்னர் ஒரு காலத்தில் இதே போன்ற கும்பல்களில் ஒன்றுக்குத் தலைமை வகித்தவர். அதனால் இம்முறை அவற்றை அடக்குவதற்கு ஏதாவது மந்திரக் கோல் தயாரித்து வைத்திருக்கிறாரோ நாம் அறியோம். கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு அடுத்த வீட்டுக்கு கல் எறியக் கூடாது என்பதையும் அவர் இப்போது புரிந்து கொள்ளக் கூடும்.

எது எப்படியாகிலும் —

தமிழர்கள் மனிதர்கள், அவர்களுக்கு உரிமைகள் உண்டு அவற்றை அவர்கள் அனுபவிக்க வேண்டும் என்ற மனோபாவம் இனனமும் சிங்கள மக்களுக்கு ஞானோதயமாகவில்லை என்பது புரிகிறது.

தாங்கள் ஆளும் இனமாகவும், தமிழர் ஆளப்படும் இனமாகவும் இருக்க வேண்டும் என்று தான் அவர்கள் விரும்புகிறார்கள். சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் அவ்வாறு நினைக்கவில்லை என்றால், சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளையும், மகாசங்கத்தையும் அவர்கள் ஒதுக்கி வைக்கத் துணிகமாட்டார்கள். இம்முறை யாவது அப்படிச் செய்கிறார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்!

ஜோர்தானிலிருந்து

கெரில்லாத் தலைவர் நாடு கடத்தல்

அம்மான், ஜூலை 9

ஜோர்தானில் இயங்கி வந்த பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கெரில்லா அணியின்முன்னாள் தலைவரான கலில் அல்பாஸி நாடு கடத்தப்பட்டார்.

ஜோர்தான் தலைநகரான அம்மானில் இருந்து செயற்பட்டு வந்த பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆதரவுடனான அல்கத்தா என்ற சிறு செரில்லாகுழுக்களின் 25 அலுவலகங்களையும் மூடி விடுமாறும் ஜோர்தானிய அரசு உத்தரவிட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுடன் ஜோர்தானிய அரசு புதிதாக ஏற்படுத்திய ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த காலேயே 'அல்கத்தா' கெரில்லா குழுத் தலைவர் வெளியேற்றப் பட்டார் என ஈரான் செய்தி தெரிவித்தது.

யாஸிர் அரபாத் தலைமையிலான பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு இதனால் ஏற்படும் பாதிப்பும் ஏற்படாதெனவும், ஜோர்தானின் அங்கீகாரம் பி.எல். ஒவிற்கு தொடர்ந்தும் இருக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ)

ஹரியானாவில் பலர் கைது

புதுடில்லி, ஜூலை. 9

லோக்தள் தலைவர் திருசெய்திலால், ஹரியானா பாரதிய ஜனதாக் கட்சிப் பொருளாளர் திரு குல்கம்சிங் கோயை ஆகியோர் உட்பட 30க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை பொலீஸார் ஹரியானாவில் கைது செய்தனர்.

ஹரியானா முதலமைச்சர் திரு. பன்சிலால் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றுக்கு அருகில் இவர்களும் எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தபோதே கைதாகினர். (ஒ)

விடுதலை செய்ய கோரிக்கை

புதுடில்லி, ஜூலை. 9

ஹரியானா சங்கர் சமிதி தலைவர் திரு. நேவிலால் கைதுசெய்யப்பட்டதற்கு லோக்தள் கட்சி தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. (ஒ)

இந்திய அமைச்சர்

சந்திரசேகர் சிங் காலமானார்

புதுடில்லி, ஜூலை. 9

இந்திய பெற்றோலியத் துறை அமைச்சர் திரு. சந்திரசேகர் சிங் நேற்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு டில்லியில் காலமானார் அவருக்கு வயது 58.

ஈரல் புற்றுநோய் காரணமாக அகில இந்திய வைத்திய விஞ்ஞான ஆய்வு சமூகத்தில் கடந்த 30 ஆம் திகதி திரு சந்திரசேகர் சிங் அனுமதிக்கப்பட்டிருந்தார்

அமெரிக்காவிலும் புற்றுநோய்காரன சிகிச்சையை இவர் ஏற்கனவே பெற்றிருந்தார்.

திரு. சந்திரசேகர் சிங் பீஹார் மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார்.

1983 லிருந்து 1985 வரை பீகார் மாநில முதலமைச்சராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

1986 லிருந்து பெற்றோலியத் துறை அமைச்சராக இவர் நியமனம் பெற்றார்.

இவரது மறைவையொட்டி இந்திய ஜனாதிபதி திரு ஜாயி ஜெயில் சிங் ஆழ்ந்த கவலை தெரித்தார்.

இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் வெளியாகவில்லை. (-ஒ)

வெளி உலகில்

பாகிஸ்தானில் இடைக்கால தேர்தல்

சாத்தியமில்லை என்கிறார் லியா

இஸ்லாமாபாத், ஜூலை 9

பாகிஸ்தானில் இடைக்காலத் தேர்தல் ஒன்றை நடத்துவது சாத்தியப்படாது.

இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி லியா மீண்டும் வலியுறுத்தினார்.

தேற்று பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் இருசபைகளும் சேர்ந்த கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

எதிர்கட்சியினர் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி நடப்பின் கடுமையான தண்டனை பெறத் தவறமாட்டார்கள் என்றும் அவர் அப்போது எச்சரித்தார். (இ-ஒ)

பிரிட்டிஷ் அமைச்சரை சந்திப்பதற்கு மறுப்பு

கேப்டறன், ஜூலை 9

ஆபிரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஸார் ஜெப்ரி ஹோவ்வைச் சந்திக்க ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மறுத்துள்ளது.

தென் ஆபிரிக்காவில் இன்னல்படும் பெரும்பான்மை மக்களுக்குக் குரல் கொடுக்காதவர்களுடன் தேசிய காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்துவது எவ்வித பிரயோசனத்தையும் ஏற்படுத்தாது என காங்கிரஸ் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய சமூகத்தின் அனுசரணையுடன் கூப்பினா ஜெபரிகோவ்வின் இந்த விஜயம் வெற்றிகரமானதாக அமையாது என ஸாம்பிய ஜனாதிபதி கௌண்டா தெரிவித்தார். (ஒ)

தமிழ் நாட்டின் சத்துணவுத்திட்டம்

சென்னை, ஜூலை 9

தமிழ் நாட்டின் சத்துணவுத் திட்டம் ஏழை மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் சிறப்பான சிறந்த ஒரு முன்மாதிரியான திட்டம் என உலக வங்கி தெரிவித்தது.

இப்பொழுது செயற்படுத்தப்படுகிறது வரும் அந்திட்டம் 5 000 கிராமங்களில் சுமார் 3 லட்சம் பெண்ணுக்கும் 1 லட்சம் குழந்தைகளுக்கும் நன்மை பயக்கிறது. (ஒ)

சமய நிகழ்ச்சிகளில்

மண்டைதீவுப் படுகொலைகள்

மூத்தநயினார் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நீர்வேலி வாய்க்கால் தரவை முத்தநயினார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பகல் கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகிறது 23 ஆம் திகதி புதன்கிழமைவரை திருவிழாக்கள் நடைபெறும்.

20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பஞ்சமுக விளக்கு வரும் சித்திரத் தேரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் தீர்த்த உற்சவமும் நடைபெறும்

23 ஆம் திகதி புதன்கிழமை பகல் அபிஷேகமும் இரவு பூங்காவனமும் நடைபெறும். (ஒ)

சிவன் கோவிலில் சப்பரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 10

சித்தன்கேணி சிவன் கோவில் நாளை வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழா நடைபெறும்.

திருவாசகயினாதன் 'அடியார் நடுவன்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார் (இ-ஒ)

தென்மராட்சி பாத யாத்திரை

யாழ்ப்பாணம், ஜூலை 10

தென் மராட்சி திருத்தல பாதயாத்திரை நாளை வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு சாவகச்சேரி தெற்கு செகுந்தன் பிள்ளையார் கோவிலில் ஆரம்பமாகின்றது.

23 ஆம் திகதி புதன்கிழமை கச்சாய் விநாயகமூர்த்தி கோவிலில் திருத்தலத்திலே பாதயாத்திரை பூர்த்தியடையும். (ஒ)

மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 10

நாளை வெள்ளிக்கிழமை காலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நடைபெறும்.

காலை 9-00 மணிக்கு பூசையும் தொடர்ந்து திருத்தொண்டர் புராணபடனமும் பின்பு சொற்பொழிவும் இடம்பெறும். மாலை 3-00 மணிக்கு சொற்பொழிவு இடம்பெறும். (இ-ஒ)

மண்டைதீவுப் படுகொலைகள் நடந்து இன்று ஒருமாதம் ஆகிறது அதனை முன்னிட்டு இப்படுகொலைகள் சம்பந்தமான மரண விசாரணைத் தீர்ப்பு விவரமாக இங்கே வெளியிடப்படுகிறது.

கறுப்புச் சீருடை அணிந்து கடற்படைப் படகில் வந்தவர்களே 'தூய நளி' படகில் வந்த 30 மீனவ தொழிலாளர்களையும் தாக்கிக்கொன்றிருக்கிறார்கள் என்பது சாட்சியங்களிலிருந்துபுலனாகின்றது.

மண்டைதீவுப் பயணிகளத்தில் உயிரிழந்த 30 தொழிலாளர்களின் மரணம் தொடர்பான விசாரணைகளின் முடிவில் வாழ்ப்பாண நீதிவான் திரு. கே. பி. எஸ். வரதராசா வழங்கிய மரண விசாரணைத் தீர்ப்பில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தீர்ப்பின் சுருக்கம் வருமாறு:-

இறந்தவர்களுள் சுப்பிரமணியம் விஜயகுமாரைத் தவிர ஏனைய அனைவரும் குருநகரைச் சேர்ந்த மீனவ தொழிலாளர்கள் சுமார் முப்பது வருடங்களாகக் குருநகரில் வாழ்ந்தார்கள்.

சுப்பிரமணியம் விஜயகுமார் மண்டைதீவைச் சேர்ந்தவர்.

மன்றிற்முன் இன்குருஸ் சிமியன் வில்லி ராஜ் சாட்சியம் அளித்தார். அவருடைய சாட்சியத்திலிருந்து படகில் சென்ற தொழிலாளர்களுக்கு நடந்த பயணத்திலிருந்து தப்பியவர் சிமியான்.

படகில் சென்றவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டவர் சிமியான் மரியதாஸ்.

10-6-86 செவ்வாய்க்கிழமை காலை 5 மணிக்குத் 'தூயநளி' படகில் அவர் சக தொழிலாளர்களுடன் தொழிலுக்குச் சென்றார்.

காலை 7 30 மணிக்கு மண்டைதீவுக் கடற்கரைக்கு அண்மையில் மீன்பிடித்தொழிலை ஆரம்பித்தனர். வலைபோட்டு இழுத்தனர். 8-30 மணிபோல் அவருக்கு வயிற்றுக்கலக்கம் ஏற்பட்டது. கலக்கத்தை கழிக்கக் கடற்கரைக் காட்டுப் பகுதி குச் சென்றார்

அவ்வாறு கரைப்பகுதியில் காலைக்கடன் கழித்துக்கொண்டிருக்கும் போது கடலில் 2 கடற்படைக் கப்பல்கள் வந்து தரித்து நின்றன

இக் கப்பல்களிலிருந்து 4 பிளாஸ்டிக் வள்ளங்கள் இறக்கப்பட்டன. இவை வெவ்வேறு திசைகளில் சென்றன. ஒன்று இத்தொழிலாளர் தொழில் செய்து கொண்டிருந்தபக்கம் வந்தது.

அவ்வள்ளத்தில் 10, அல்லது 15 கறுப்புச் சட்டை சீருடைஅணிந்தவர்கள் வந்தனர். அவ்வாறு வந்தவர்களின் கைகளில் கூரிய கத்தி பொருந்திய துப்பாக்கிகள் இருந்தன.

கறுப்புச் சட்டைக்காரர் இத்தொழிலாளர்களைவருமாறு வகைகாட்டிப் பின்னர் துப்பாக்குகளால் சுட்டும் கத்தியால் வெட்டியும் இருக்கினார்கள்.

தாக்குதல் இவ்வாறு நடந்தபோது அவர் 40 யார் தூரத்தில் கரையில் பற்றையில் இருந்து சிமியான் பார்த்திருக்கிறார். தாக்குதல் நடந்தபோது தொழிலாளர்கள் குரலெழுப்பிக் குழறி இருக்கிறார்கள் இவர்களுள் ஒருவர்தானும் தப்பவில்லை.

பின்னர் இத்தாக்குதல் நடத்தியவர்கள் படகில் சென்று கப்பலில் ஏறிப்போனார்கள் — இது அவருடைய சாட்சியம்.

இந்தச் சாட்சியத்தை மன்று ஏற்கிறது. இச் சாட்சியத்தினபடி இத்தொழிலாளர்களைத் தாக்கிக் கொன்றவர்கள் கறுப்புச் சீருடை அணிந்து கடற்படைப் படகுகளில் வந்தவர்கள் என்பது புலனாகின்றது.

இன்னொரு சாட்சியான இ. நிமியாஸ் இந்தவர்களின் சடலத்தை இறங்கு துறைக்குக் கொண்டுவந்தவர்

மொத்தம் 31 பேரில் உயிர் தப்பிய ஒருவரைத் தவிர ஏனையோர் 30 பேர். 29 சடலங்களே கண்டு பிடிக்கப்பட்டன.

காணாமல் போனவரின் பெயர் ஞானப்பிரகாசம் அன்ரனி சாட்சியங்களின் படி அன்று தொழிலுக்குச் சென்ற அனைவரும் இறந்துவிட்டார்கள் எனவே அவரும் இறந்துவிட்டார் எனக் கருத வேண்டியுள்ளது. இவரது தீர்ப்பு பகிரங்கமாக வாசிக்கப்பட்டிருக்கிறது.

'இவர்களின் மரணம் கொலை என்று தீர்ப்பு அளிக்கிறேன். இவை தொடர்பாகத் தொடர்ந்து புலன் விசாரணை செய்து உரிய சட்டநடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்குப் பணிப்புரை வழங்குகிறேன்'- இப்படித் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது. (உ-ஒ)

சொல்லாகிறோம்

குறள்:

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

பொருள்:

சொற்களில் பயன் உடையை சொற்களை மட்டும் சொல்லவேண்டும்! பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவே கூடாது.

மாகாண சபை

இனப்பிரச்சினைக்குக் குறைந்த பட்சத் தீர்வு சாத்தியம்

இடது கம்யூ: நம்பிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 10

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாதையில் அரசு முன்வைத்துள்ள மாகாண சபை யோசனைகள் ஒரு அரம்ப அடிப்படை யோசனைகளாகவே காணப்படுகின்றன.

இவற்றை அடிப்படையாகக்கொண்டு பரிவர்த்தனையும் தெரிவானது மான பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்டசகல தரப்பினரும் பொறுப்புடனும் நிதானத்துடனும் ஈடுபட்டால் இனப்பிரச்சினைக்கு குறைந்தபட்சத் தீர்வு சாத்தியமாகும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மத்திய குழு மாகாண சபை யோசனைகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கட்சிப் பொதுச் செயலாளர் திரு கே. ஏ. ஒப் பிரமணியம் வெளியிட்டுள்ள இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசியல் கட்சிகளின் அடுத்த மாநாட்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர் விடுதலைக் கூட்டணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

வித்தாரம்

என்ன முரளியாரே, முகத்தை உப்பெண்டு வைத்துக்கொண்டு இருக்கிறீர்?

நீர் சொல்லத் தேவையில்லை. எனக்குத் தெரியும் கனநாளாய் நான் உண்மைச் சந்திக்கவிக்க என்டு எண்ணுவட நீர் கோவம். அது தானே முகத்தைச் சுளிக்கிறீர். இல்லையோ?

சரி இன்டோடை வேலையை விடும். கிழமையில் ஆகக் குறைஞ்சது நாலு நாளைக்காவது உண்மைச் சந்திக்கிறதுண்டு முடிவு செய்திருக்கிறேன்

நான் இடம்மாறி வந்து சந்திக்கிறதில் இரந்து பரித்திருக்கும் என்டு நினைக்கிறேன்.

சரி அண்டைக்குக்கடை சியாச் சந்திக்கவிக்க 'விஜே'வைப்பற்றி சொல்லிப்போட்டு அடுத்த நாள் உண்மைச் சந்திக்க முடியவில்லை—

'விஜே'யை அவர் உத்தமத்தான் தமிழ் நாட்டுக்கு அனுப்பி என்னடை தம்பிமாரோடை பேச ஏற்பாடு செய்தார் என்டு சொல்லியிக்க அப்ப மரவலாப் பேசப்பட்டது.

முதல்முறை போனபோது அவருக்கு தமிழ் நாட்டில் ஏமாப்பட்டவர் வேற்புக் கிடைச்சிட்டுது.

இஞ்சை வந்தவுடனே பெரிய குண்டு ஒன்டைத் தூக்கிப் போட்டார். வார் சொல்லியும் சான் தமிழ்நாடு போகவிக்க என்டும், தன்னர சொந்த என்னத்திலே, தன்னர கட்சி சார்பிலே தான் போனதாகச் சொன்னார்

சும்மா சொல்லக் கூடாது தன்கை போய் அவர் பலபேரோடை கதச்சிருக்கிறார். கதப்படியாகச் சில வேலையளைச் செய்தும் இருக்கிறார். சில ஆச்சரியமான யோசனைகளையும் சொல்லிவிருக்கிறார்

மகசான் 'விஜே'இனிடை அரசாங்கத்தோடை சேர்ந்து போவதுப் போறார் என்டு அறிஞ்சதான், அனுராமாகண சபை யோசனைவை எழுத்துக்கு எழுத்து எதிர்க்கவேணும் என்டு முன்னுக்கே சொல்லிப் போட்டார்.

'விஜே'யின்ரை விஷயத்துக்கு வருவம் தமிழ் போராளியளிட்டை சமாதானம் பேசுறதுக்கு இந்தியாவிந்தலைவர்களை அனுப்பத்தான் ஜே. ஆர். ஆம்பிச்சார். ஆனா அவருக்குக் கிடைச்சவர் 'விஜே' தான்.

அதுவும் ஒரு பெரிய இடத்துக் கலியாணவீட்டுக்கு இரண்டுபேரும் போன இடத்திலதான் போராளியளைச் சந்திக்கிற விஷயமும், அரசியல் கதைக்க மாநாடு விஷயமும் கிளிச் பண்ணின தாய் கேள்வி.

'விஜே' திரும்பலும் இந்தியா போகவிட்டார் இம்முறை புது டில்லி பக்கமும் போகப் போறதாய்ச் சொல்லிவிருக்கிறார்.

மகசான் அனுராவை விடலும் மாமிமாவை விடலும் தான் ஏதாவது சாதிச்சு தென்னிலங்கை அரசியல் வானில் திரைவானில் மிளனுமாப் போலே மின்னவேணும் என்டது விஜே யின்ரை பெரிய ஆசை.

அந்த ஆசையை வைக்கிறியானைத் தடுக்கிறியானா மாகாண சபை ஒன்டு அரசாங்க உயர் மட்டம் நினைச்சிருக்கலாம். ஏனென்டாக் தான்கள் எதைக்கொண்டு வந்தாலும் அமையார் என்ற எதிர்பார்ப்பு; சில மக்கள் கருத்தைத் திரும்புவார், கருத்துக்கு நேராகவே ஒன்டுமெ வார் என்டு அரசாங்கத்துக்குத் தெரியும்

ஏனென்டா அவரும் அதிகாரத்தில் இல்லாத போது அவரைத்தானே செய்தவை

சரி, நான் வாறன். ...!



திருமணம், பிறந்த நினம்
மற்றும் எந்த வைபவத்தையும் சிறக்கவைக்க
'அணில்' ஐஸ்கிறீம்
பரிமாறுங்கள்
80 ml. Plastic Cups: R. 3-50 only
மேலதிக விலைக்கழிவுகள் உண்டு.
Also: FAMILY BLOCKS, GALLONS
dyn ads marketing
476, Main Street, CHUNDIKULI.
(Opposite St. John's College)

உதயன்
10-07-1986 வியாழக்கிழமை

DELICIOUS அணில் ICECREAM
I LOVE "அணில்" ICE CREAM

ஒரே குடும்பத்தைச்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளின் கதவுகளில் எல்லாம் ஒரு கூட்டம் தட்டிக் கொண்டே சென்றது.

பல் நிலையப் பக்கமாக வந்த கோஷ்டி ஒன்றே இப்படித் தட்டியபடி சென்றதாம்.

குடியிருப்பாளர்கள் எவரும் கதவுகளைத் திறக்காது இருந்து விட்டார்கள்.

ஆனால் தம்பியப்பா என்பவர் மட்டும் தனது வீட்டுக் கதவைத் திறந்து 'என்ன' என்று கேட்டாராம்.

"பூனாவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் உங்கள் இரண்டு மகன்களையும் கொண்டு வந்திருக்கிறோம் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்" என்று கதவைத் தட்டிய வர்கள் கூறியதால் தான் தம்பியப்பா கதவைத் திறந்தாராம்.

உடனே அந்த கோஷ்டி தம்பியப்பா, அவரின் மனைவி, பிள்ளைகள் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பின்னர் சடலங்களை வீதி வழியே இழுத்துச் சென்று இரண்டு இடங்களில் போட்டு எரித்தனர்.

இறந்தவர்களின் விவரங்கள் வருமாறு:

கே. தம்பியப்பா, (வயது 62) மனைவி தங்கரத்தினம், (வயது 50) மகள் ரஜனி, (வயது13) மகன் சாந்திவி, (வயது 18) மகன் மோகன் (வயது 20)

இம்மரணங்களை கொலைச் சம்பவங்கள் என்று திருகோணமலை பதில்நீதிவான் திரு எம். கே. செல்லராசா தீர்ப்பளித்தார்.

திரு. தம்பியப்பா, தனது வீட்டில் நீண்ட காலமாக ஒலிபெருக்கி சாதனங்களை வாடகைக்கு விடும் நிலையம் ஒன்றை நடத்தி வந்தார்.

அவரது இருமகன்மார் அண்மையில் நடந்த தேடுதலில் கைதாகி பூஸா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-எ-150)

ஞாயிறுகொழும்புவரும் கூட்டணிகுழுவில்ஐவர்

கொழும்பு, ஜூலை 10 எதிர்வரும் ஞாயிறு நாளை தமிழர் விடுதலைக் கூட்டணிக்குழுகொழும்பு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இம்முறை கொழும்பு வரும் கூட்டணிக்குழுவில் திரு. எம். சிவசிதம்பரம், திரு அ. அமிர்தலிங்கம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோருடன் வேறு இரண்டு அரசியல் குழு உறுப்பினர்களும் வருவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டணியின் அரசியல் குழுவில் அங்கம் வகிக்கும் தீவிரவாதப் போக்குக் கொண்டவர்களில் இருவரே மூன்று தலைவர்களுடன் வருவர் என்று கூறப்படுகின்றது.

பாதுகாப்பு

கொழும்பில் பெரும்பாலும் ஹோட்டல் ஒபரோயில் கூட்டணிக் குழு தங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குழுவுக்கு தீவிர பாதுகாப்பு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கூட்டணித் தலைவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவது சம்பந்தமாக இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுள்ளன.

இந்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ள யோசனைகள் உண்மையானவை என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா அளித்த விளக்கத்தை ஏற்றுக் கொள்வதாக கூட்டணி அரசியல்குழு அறிவித்தது.

நேற்றுச் சென்னையில் கூடிய அரசியல் குழுக் கூட்டத்தில், வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கருடன் நடத்திய பேச்சுக்கள் பற்றிய அறிக்கைகளை திரு. சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் சமர்ப்பித்தனர்.

அறிக்கைகளை அரசியல் குழு பரிசீலித்தது. இலங்கை அரசின் யோசனைகளை மற்றத் தமிழர் அமைப்புக்களிடம் கையளிக்கவும் தீர்மானித்தது.

(உ-எ)

படுவான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு இரண்டு சகோதரர்கள் உட்பட மூன்று பேரின் சடலங்கள் தீயில் கருகி எரிந்த நிலையில் காணப்பட்டன.

அப்பகுதியில் பால் கொண்டு வந்த இருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மணல்பிட்டி என்ற இடத்தில் குண்டுத் தாக்குதலினால் 6 பேர் பலியானதாகக் கூறப்பட்டது

இதுதவிர, தேடுதலின் போது சுட்டுக் கொல்லப்பட்ட 8 பேரின் சடலங்களைப் பாதுகாப்புப்படையினர் தம்முடன் எடுத்துச் சென்றனர்

இந்தச் சம்பவங்களின் போது எவரும் கைது செய்யப்படவில்லை.

எனினும் சில வீடுகளில் பொருள்கள் கொள்ளையிடப்பட்டதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது.

பலியினரைக் கண்டு சைக்கிளைப் போட்டு விட்டு ஓடிய சுமார் 25 பேரின் சைக்கிள்களைப் படையினரே தம்முடன் கொண்டு சென்றதாகவும் முறையிடப்பட்டது

(உ-21)

லொறிகள்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மறித்தனர்.

அவர்கள் லொறிகள் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர்.

இதில் 16 பேர் உயிரிழந்தனர். லொறிகளும் எரிக்கப்பட்டன

இறந்தவர்களின் சடலங்கள் நேற்று அதிகாலை 3 மணியளவில் திருகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டன.

இறந்தவர்களில் பெரும்பாலோர் திருமலை மீன் சந்தையில் தொழில் செய்பவர்கள். ஊர்காவல் படையிலும் சேர்ந்து பணியாற்றியிருந்தனராம்.

இறந்தவர்கள் சம்பந்தமான மரண விசாரணைகளை திருமலை பதில் நீதிவான் திரு எம். கே. செல்லராசா நடத்தினார்.

கொலைச் சம்பவங்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது:

(அ-எ-150)

ஓய்வூதியம் வழங்கப்படும் தினங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 10

அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படும் ஜூலை மாத ஓய்வூதியங்கள் பின்வரும் திகதிகளில் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து வழங்கப் படும்.

விவரம் வருமாறு:

ஜூலை 22:- கொக்குவில், மானிப்பாய், வேலணை, வண்ணார்பண்ணை

ஜூலை 23:- வல்வெட்டித்துறை, தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, வயாவிளான.

ஜூலை 24:- யாழ்ப்பாணம், கைதடி

ஜூலை 25:- கரவெட்டி: காங்கேசன்துறை, அளவெட்டி, சுன்னாகம்

ஜூலை 28:- நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு. சுழிபுரம்.

ஜூலை 29:- கோப்பாய், காரைநகர், பருத்தித்துறை, தொடிகாமம்

ஜூலை 30:- யாழ்ப்பாணம், அச்சுவேலி, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை.

ஜூலை 31:- சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, உரும்பராய், சங்கானை.

(இ-எ)

முஸ்லிம்----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், எம்பிக்கள் தொடர்புபடுவதோடு இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாது மாணவர்களுக்கு பாதுகாப்பை வழங்கக் கூடிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என முஸ்லிம் மஜ்லிஸ் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

(உ)

ஊரடங்கு. . .

(1ஆம்பக்கதொடர்ச்சி)

டது.

பெரும்பாலும் பொலீஸார்தான் நகரில் காவல் புரிகின்றனர்.

நேற்று அதிகாலை வீடுகளின் கதவுகளைத் தட்டிச் சென்ற குண்டர் கோஷ்டி கற்களை வீசி, சட்டத்தரணிகள் சுமாதவராசா, இரா. சந்திரபாலன் ஆகியோரின் வீடுகளைச் சேதப்படுத்தியது.

அச்சுறுத்தலின் மத்தியில் திருமலை நகரில் தமிழர்கள் இருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

(எ-150)

போராளிகளுக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைப் போராளிகள் எழுவரும் படகு விபத்தில் மரணமானார்கள் என்பது தெரிந்ததே.

இன்று பிற்பகல் 3 மணியுடன் கடைகளைப் பூட்டியும் போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தியும் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

இந்திய மீனவரை ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 10

கடற்படையினரின் தாக்குதலில் உயிர் தப்பி யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இந்திய மீனவர் வேலுத்தேவன் கணபதிபிள்ளை தம்மிடம் ஒப்படைக்கும்படி இரகசியப் பொலீஸார் கோரி உள்ளனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் சுகாதார அமைச்சு மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்.

இந்தியாவுக்கு அந்த மீனவரைத் திருப்பிஅனுப்

இந்தியாவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மேற்கண்ட உறுதி மொழியை இந்தியத் தூதரிடம் வழங்கியுள்ளார்

அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தப்படமாட்டாது கூறப்பட்ட உறுதி மொழியில் இருந்து பின்வாங்க மாட்டேன்—இப்படி ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ-எ)

கொழும்பு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ முகாமிற்கு வந்தாலேயே பெர்மிட் வழங்கப்படும் என இராணுவ அதிகாரி தெரிவித்தாராம்.

இதனால் நேற்று தனியார் பஸ் உரிமையாளரும், லொறிச் சொந்தக்காரரும் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர்.

(இ-6)

வவுனியாவுக்கு கறுப்பு ஸ்ரூடை அணிந்தோர் வருகை

வவுனியா, ஜூலை 10

அப்பாவித் தமிழர்கள் கறுப்பு ஸ்ரூடை அணிந்தோரால் வவுனியாவில் அடிக்கடி கைது செய்யப்படுவது குறித்து வவுனியா மாவட்ட பிரசைகள் குழு, கொழும்பு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முறையிட்டிருக்கிறது

வவுனியாவில் அதிகாலையில் நித்திரையில் வைத்தே பலர் ஸ்ரூடையினரால் கைது செய்யப்படுகின்றனராம்.

காலையிலேயே கறுப்பு உடை அணிந்தோரின் நடமாட்டத்தைத்தான் வவுனியா நகரில் காணக் கூடியதாக உள்ளதாம்.

அப்பாவித் தமிழர் கைதாவது பற்றி வவுனியா இராணுவ அதிகாரிகளிடம் கேட்டால், கைது செய்யப்படுபவர்கள் அனைவரும் தீவிரவாதிகள் என்று கூறுகின்றார்கள் எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது

(உ-எ-6)

பிரசைகள் குழு முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 10

அப்பாவித் தமிழர்கள் கறுப்பு ஸ்ரூடை அணிந்தோரால் வவுனியாவில் அடிக்கடி கைது செய்யப்படுவது குறித்து வவுனியா மாவட்ட பிரசைகள் குழு, கொழும்பு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முறையிட்டிருக்கிறது

வவுனியாவில் அதிகாலையில் நித்திரையில் வைத்தே பலர் ஸ்ரூடையினரால் கைது செய்யப்படுகின்றனராம்.

காலையிலேயே கறுப்பு உடை அணிந்தோரின் நடமாட்டத்தைத்தான் வவுனியா நகரில் காணக் கூடியதாக உள்ளதாம்.

அப்பாவித் தமிழர் கைதாவது பற்றி வவுனியா இராணுவ அதிகாரிகளிடம் கேட்டால், கைது செய்யப்படுபவர்கள் அனைவரும் தீவிரவாதிகள் என்று கூறுகின்றார்கள் எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது

(உ-எ-6)

3 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
10 - 04 - 1910

ஆண்டவன் அடியில்:
10 - 07 - 1983

மரியாம்பிள்ளை பிருன்சிஸ்

(பிரபல வர்த்தகரும் பொன்னதேத் ருண்ஸ்போட், பருத்தித்துறை இன்டஸ்ரியல் வேக்ஸ் உரிமையாளரும்)

கல்லறையில் உன்னை வைத்து
கண்ணீரால் மூடிவிட்டோம்
விண்ணுலகு நீர் விரைந்து
வேண்டிடுவாய் எம்மவர்க்காய்.

எம் அன்புத் தலைவா! இருண்ட இவ்வுலகில் எமக்கு ஒளி விளக்காய்த் திகழ்ந்த தாங்கள் எம்மை இருளில் தவிக்கவிட்டு இறைவனிடம் சேர்ந்து ஆண்டு மூன்று ஆகின்றதையா, தங்கள் பிரிவை எண்ணி எண்ணிக் கண்ணீரும் கவலையும் கொள்கின்றோம் தங்கள் ஒளி என்றும் எம்மில் நீங்கா நினைவாக, நினைவின் நிழலாக துலங்க ஏங்கி உங்கள் பிரிவால் துயருறும் அன்பு உள்ளங்கள்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

'ரேஸ் கொம்''
கடற்கரை வீதி, பருத்தித்துறை.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக நினைவுகூரல் திருப்பலிகள் பேசாலை, புனித வெற்றிநாயகி ஆலயம், மார்சன்பதி புனித கபிதார் ஆலயம்; நெல்லியடி புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6.30 மணிக்கும் பருத்தித்துறை புனித தோமையார் ஆலயதில் மாலை 5.30 மணிக்கும் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

இனப் பிரச்சினைக்கு .

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

யும் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் தவறாது பங்குகொள்வதன் அவசியத்தை எமது கட்சி வற்புறுத்துகின்றது.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தீவிரவாத இளைஞர் இயக்கங்களையும் பங்கு கொள்ளச் செய்வதற்கான முன் நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப் பட வேண்டும்.

இன்றைய நவகாலனித்துவ அமைப்பிற்குள் மாகாண சபை யோசனைகள் மூலம் முழுமையான ஒரு தீர்வைக் காணமுடியாது

உண்மையான தீர்வை தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் உருவாக்கப்படும் பிரதேச சுயாட்சி அமைப்பு முறையினூடேயே வென்றெடுக்கமுடியும்.

ஆனால் தமிழ் மக்களது [illegible] அழிப்பு நடவடிக்கைகள் [illegible] நிரந்தரமும் நாளாந்தம் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியில் அதிகரித்துவரும் படுகொலைகள், உடைமை இழப்புக்கள், இதர சேதங்களை முடிவுக்குக் கொண்டுவரவும் மாகாணசபை யோசனைகள் ஓர் இடைக்காலத் தீர்வாக அமையுமானால் அதை எமது கட்சி மனப்பூர்வமாக வரவேற்கும்.

அரசு முன்வைத்துள்ள மாகாண சபை யோசனைகளை பயன் உள்ள பேச்சுவார்த்தை யாக்குவதற்கு முன்னோடியாக எமது கட்சி ஏற்கனவே வலியறுத்திவந்த அரசியல் அமைப்பின் 6 ஆவது திருத்தம் வாபஸ்பெறப் பட வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஐந்தாம் பிரிவும் நீக்கப்படவேண்டும். அதுடன் உறுதியான ஒரு யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கும் முன்வருவது அவசியமாகும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

ஓராண்டு நினைவஞ்சலி

செல்வி சந்திரா நடராசா

அன்னை மடியில் 4—4—1966. ஆண்டவன் அடியில் 10—7—1985,

இலைத்துக்கு ஒளிவிளக் கேற்ற
ஓரே மகளாய்த் திருமகள் போலப்பிறந்தாய்
கல்வியைத் தந்து, வளர்ச்சிகண்டு,
மனம் பூரித்து மகிழ்வு கொண்டிருந்தபோது
கொடியவர் உருவில் வந்த காலன்
எங்கள் குலக் கொடியை
நொடிப் பொழுதிற் பறித்துச் சென்று
எங்களைத் தவிக்கச் செய்திட்டான்

எங்கள் நினைவுகள் ஓயவில்லை;
கவலைகள் தீரவில்லை;
கண்களிற் கண்ணீர் வற்றவில்லை;
உண்ணவும் உறங்கவும் முடியவில்லை;
சந்திரா சந்திரா என்று உன் அன்னை
ஓயாது அரற்றும் குரல் கல்லையும் உருகச் செய்யும்

மந்திர தந்திரங்களாற் கூட எம் நெஞ்சின் நினைவுத் துயரை மாற்ற முடியாது

ஓராண்டாகி என்ன, பலவாண்டு சென்றாலும் உன்னை மறக்க மாட்டோம்.

நீராக நினைந்து எம் கண்கள் குளமாகின்றன.
விதியை எவர் தாம் மாற்ற வல்லவர்
பிரிய மகளே, எமதருஞ் செல்வமே,
இறைவன் பாதத்தில் நீஅமைதி கொள்வாய்
பிரிவுத் துயரை மனத்தில் வைத்து
உன் நினைவலைகளில் நாங்கள் நீந்துவோம்.

நீர்வேலி மத்தி
நீர்வேலி
10—7—1986.

உன் நினைவில் வாடும்
அப்பா, அம்மை,
உற்றார், உறவினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 10—07—1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road. JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office, SriLanka Under Number QJ 60 N86:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org